**O**.**S**.248/2012

**DW**4, குப்புசாமி

நாள் : 02.03.2020

**சாட்சி இன்று ஆஜர். சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படுகிறார்.**

**3ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை இல்லாததால் 5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை அனுமதிக்கப்பட்டது.**

**5 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை ..**

நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தவிர மற்ற 2 வழக்குகளில் இவ்வழக்கின் 5ம் பிரதிவாதி சாந்தி தரப்பினர் இல்லை. தாவா சொத்தைத் தவிர அதற்கு முன் நான் வேறு சொத்துக்கள் எதுவும் கிரையம் வாங்கியது இல்லை. பொதுவாக ஒரு சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்னர் அதில் ஏதாவது வில்லங்கம் இருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ள வில்லங்கச் சான்றிதழ் வாங்கி பார்ப்பது வழக்கம் என்றால் சரிதான். 27.02.2012 ம் தேதி நான் கிரையம் பெற்ற சொத்திற்கு ஏதாவது வில்லங்கம் உள்ளதா என்று வில்லங்கச் சான்றிதழ் சரிபார்த்தேன். அந்த வில்லங்கச் சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்று ஞாபகம் இல்லை. அந்த வில்லங்கச் சான்றிதழில் தாவா சொத்தைப் பொறுத்து எந்த வில்லங்கமும் காட்டப்படவில்லை. பி.வா.சா.ஆ.15 தாவா சொத்திற்குரிய வில்லங்கச் சான்றிதழ்தான். இதைத்தான் நான் கிரையம் வாங்குவதற்கு முன்னர் சரிபார்த்தேன். நான் கிரையம் வாங்கி 2 மாதங்கள் கழித்து 23.04.2012 ம் தேதி போட்டுதான் வில்லங்கக் குறிப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கிரையம் வாங்குவதற்கு முன்னர் தாவா சொத்தில் என்னென்ன பதிவுகள் உள்ளது என்று தெரிந்து கொண்டுதான் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். நான் வில்லங்கச் சான்றிதழ் வாங்கி பார்த்தபோது 11.09.2006 ல் 2ம் பிரதிவாதி லோகநாதன் தாவா சொத்தில் பொதுவில் 1/4 ஒரு சுப்பிரமணியம் என்பவருக்கு கிரையம் கொடுத்திருப்பதை தெரிந்து கொண்டேன். அந்த சுப்பிரமணியத்திடம் இருந்து 1/4 பங்கை 5 ம் பிரதிவாதி சாந்தி கிரையம் வாங்கியதை நான் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். அதுதவிர லோகநாதன் தன் மனைவி 5ம் பிரதிவாதி சாந்திக்கு 16.09.2009 ல் தாவா சொத்தைப் பொறுத்து ஒரு செட்டில்மெண்ட் எழுதி வைத்திருந்தார் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. நான் வாங்கிய பி.வா.சா.ஆ.15 ல் அந்த செட்டில்மெண்ட் பற்றி கண்டுள்ளதா என்றால் சாட்சி ஆவணத்தைப் படித்துப் பார்த்துவிட்டு அந்தப் பதிவு இருப்பதாகக் கூறுகிறார். நான் வழக்கு சொத்தைப் பொறுத்து முதன்முதலில் 2012 ல் பதிவு செய்யப்பட்ட பத்திரம் மூலம் என் பெயருக்கு சொத்துரிமை ஏற்பட்டதாக நான்

கூறுகிறேன் என்றால் ஆமாம். சுப்பிரமணியத்திடம் இருந்து சாந்தி கிரையம் பெற்ற ¼ பங்கை தங்கமுத்துவிற்கு கிரையம் செய்து கொடுத்த பதிவுகளை வில்லங்கச் சான்றிதழ் மூலம் தெரிந்து கொண்டேன். எனவே ¼ பங்கு கிரையம் வாங்கிய வகையில் தங்கமுத்துவிற்கு உரிமை வந்துவிட்டது என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். லோகநாதன் எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் படி சாந்தி சொத்தை வேறு யாருக்கும் எழுதிக் கொடுக்கவில்லை என்பதை தெரிந்து கொண்டேன். எனவே 16.09.2009 செட்டில்மெண்ட்படி இன்னும் அந்த சொத்து சாந்தியிடம்தான் உள்ளது என்றால் இல்லை. என் வசம்தான் உள்ளது. நான் உரிமை கோரும் ஆவணமே தங்கமுத்துவும், சாந்தியும் வாங்கியதன் பின்னால் ஏற்பட்டது என்றால் தவறு. நான் அதற்கு முன்பே கிரையம் வாங்கியிருக்கிறேன். நான் 2008 ல் ஏற்பட்டதாக சொல்லும் கிரைய உடன்படிக்கை பதிவு செய்யப்படாதது என்றால் சரிதான். அந்த பதிவு செய்யப்படாத கிரைய உடன்படிக்கையை நான் தற்போதுவரை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் ஒரு உடன்படிக்கையே இல்லை என்றும், இவர்களுக்கள் சொத்து பரிமாற்றம் நடப்பது தெரிய வந்து பதிவு செய்யப்படாத மோசடியான கிரைய ஆவணத்தை நான் ஏற்படுத்திக் கொண்டேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 2 ம் பிரதிவாதி லோகநாதன் எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் படி 5 ம் பிரதிவாதிக்கு பாதி பங்கு உள்ளது என்றும், அவர்தான் அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றும் சொன்னால் தவறு. என்னுடைய அனுபவத்தில்தான் இருந்து வருகிறது. எனது அனுபவத்தில் சொத்து இருப்பதைக் காட்ட கிரையப் பத்திரம் தவிர வேறு ஆவணம் இல்லை என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.248/2012 ன் படி தாவா சொத்தில் 1/2 பாகம் 5 ம் பிரதிவாதி சாந்திக்குதான் என்றும், அதில் நான் எந்த பாகமும் கோர முடியாது என்றால் சரியல்ல. மோசடியாக ஒரு கிரையப் பத்திரத்தை ஏற்படுத்திக் கொண்டு ஒரு வழக்கை தாக்கல் செய்து இந்த வழக்கிலும் எதிர் வழக்குரை தாக்கல் செய்து கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை .. வழக்கறிஞர் வேண்டுதலின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.**